| | |
|---|---|
| மையம் : ______________ | பெயர்: ______________ |
| மேற்பார்வையாளர் கையொப்பம்: ______________ | பதிவு எண்: ______________ |
| | நாள் : ______________ |

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சான்றிதழ்க் கல்வி**

**BA00 மேல்நிலை**

**எழுத்துத் தேர்வு – ஜனவரி–பிப்ரவரி 2022**

**நேரம் : 1.30 மணி** **மதிப்பெண் : 50**
Time : 1.30 hrs. Total Marks : 50

**பகுதி – 1**

I. **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**
Read the following text and answer the questions given below in a single line.
**(5x1=5)**

தமிழ்நாட்டில் பல இடங்களில் சிவன் கோவில்கள் உள்ளன. இந்த சிவன் கோவில்களில் சிவபெருமான் லிங்க வடிவில் காட்சியளிக்கின்றார். சிவனைக் கடவுளாக வழிபடுவோரைச் சைவர்கள் என்பார்கள். சைவர்கள் பின்பற்றும் சமயத்தைச் சைவ சமயம் என்கிறோம். சைவ சமயத்தின் சிறப்புகளை மக்களிடம் எடுத்துக் கூறியவர்களை நாயன்மார்கள் என்கிறோம்.

அந்த நாயன்மார்களை 63 நாயன்மார்கள் என்று கூறுவார்கள். அவர்களின் வரலாற்றைப் பெரிய புராணம் என்னும் நூல் தெரிவிக்கிறது. பெரிய புராணத்தைச் சேக்கிழார் இயற்றியுள்ளார்.

**வினாக்கள் :**

1. சிவன் கோயில்களில் சிவபெருமான் எவ்வாறு காட்சி அளிக்கிறார்?

______________________________

2. பெரிய புராணத்தை இயற்றியவர் யார்?

______________________________

3. நாயன்மார்கள் மொத்தம் எத்தனை பேர்?

___

4. சைவ சமயத்தின் சிறப்புகளை மக்களிடம் எடுத்துக்கூறியவர்களை எவ்வாறு அழைக்கிறோம்?

___

5. சைவர்கள் யாரை கடவுளாக வழிபடுவார்கள்?

___

**II. பின்வரும் பாடல் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

Read the following poem and answer the questions given below in a single line.

**(5x1=5)**

சான்றாண்மை இவ்வுலகில்
தோன்றத் துளிர்த்த தமிழ்
மூன்றும் செழித்தது என்று
கொட்டு முரசே! – வாழ்வில்
ஊன்றிய புகழ் சொல்லி
கொட்டு முரசே!

ஈன்று புறந்தருதல்
தாயின் கடன்! உரைத்தல்
எல்லார்க்கும் கடனென்று
கொட்டு முரசே! – வாழ்வில்
தேன் மழை பெய்தது என்று
கொட்டு முரசே!

**வினாக்கள்**

1. இவ்வுலகில் என்ன தோன்ற வேண்டும்?

___

2. தமிழ் மூன்றும்___________________ என்று கொட்டு முரசே.

___

3. ஈன்று புறந்தருதல் யாருடைய கடன்?

4. எது எல்லாருக்கும் கடன்?

5. வாழ்வில் எந்த மழை பெய்ய வேண்டும்?

**III. பின்வரும் சொற்களைப் பொருள் தருமாறு சொற்றொடரில் அமைக்க.**
Form meaningful sentences using the following words. **(5x2=10)**

1. இயற்கை

2. உண்மை

3. அன்பு

4. புரட்சி

5. விருப்பம்

IV. **பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சில வரிகளில் விடை தருக.**

Answer any Five of the following questions in a few lines. **(5x4=20)**

1. தாயுமானவர் இறைவனிடம் அருள் புரியுமாறு எதற்காக வேண்டுகிறார்?
2. எதிர்கால இந்தியாவை ஆள போகின்றவர்கள் யார்?
3. கட்டு மரங்களும் படகுகளும் எதை நெருங்கிக் கொண்டிருந்தன?
4. மயங்கிக் கிடந்த புத்தருக்குச் சிறுவன் செய்த உதவி யாது?
5. ஏனாதி நாதரின் பண்பு நலன்களை விளக்குக.
6. தாலாட்டு பாடல் – விளக்குக.
7. மெய் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை?
8. போட்டிக்குத் தயார் செய்வது குறித்து விஜயலட்சுமி கூறுவன யாவை?
9. நேர்காணல் என்றால் என்ன?
10. பால் என்பதன் பொருள் யாது? அதன் வகைகளை உதாரணத்துடன் விளக்குக.

V. **பின்வரும் பொருள்களுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக.**
Write a letter on any one of the given subjects. **(1x10=10)**

1. கொரானா வைரஸ் தொற்று பரவிய காலத்தில் கிடைத்த விடுமுறையில் கணினி வழியே நீ அடைந்த பயன்கள் குறித்து உன் மாமாவிற்கு ஒரு கடிதம் வரைக.

2. இன்றைய சூழ்நிலையில் பரவி வரும் தொற்று நோய்களிலிருந்து நம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பது குறித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

3. நீ வளர்த்துவரும் வளர்ப்புப் பிராணியின் மீது நீ கொண்டுள்ள அன்பினைக் குறித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.